# திராவிட மாடல் அரசு 23

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

நகர்ப்புற நல வாழ்வு மைய மருத்துவ சேவையை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த போது...



# நகரங்கள் நலம் பெறட்டும்!

அதிகரித்து வரும் நகரமயமாக்கல், பெருகி வரும் மாசு, மக்கள் தொகை அடர்த்தி, காலநிலை மாற்றம், அதனால் ஏற்படும் இயற்கைப் பேரிடர்கள் போன்ற பல காரணங்களால் கிராமப்புற மக்களைக் காட்டிலும், நகர்ப்புற மக்கள் அதிக அளவு உடல்நல பாதிப்புகளுக்கு உள்ளாவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கடந்த 70 ஆண்டுகளில் ஒன்றிய, மாநில அரசுகள் தொடர்ந்து கிராமப்புறப் பகுதிகளில் மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்த கவனம் செலுத்தியதால், கால ஓட்டத்தில் நகரவாசிகளுக்கான மருத்துவக் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதிலும் பரவலாக்குவதிலும் தொய்வு ஏற்பட்டுள்ளது.

இதனால், சாதாரண காய்ச்சல், சளி, இருமல் போன்றவற்றுக்குச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென்றால் கூட, அருகில் உள்ள பெரிய அரசு மருத்துவமனைகளையோ அல்லது தனியார் மருத்துவமனைகளையோ நகரவாசிகள் நாட வேண்டியுள்ளது. ‘கைராசிக்கார டாக்டர்’ என்று அறியப்படும் சில மருத்துவர்களின் ‘கிளினிக்’குகளில் கூட்டம் நிரம்பி வழிகிறது.

## பொது சுகாதாரத்தின் புதிய தூண்கள்

பன்றிக் காய்ச்சல், டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்க் காலங்களில் நகர மக்களுக்கான தனி மருத்துவக் கட்டமைப்புகளைப் பரவலாக்குவதன் தேவை, அதிக அளவில் உணரப்பட்டது. உலக சுகாதார நிறுவனம் முதற்கொண்டு பல நாடுகளும் நகரங்களுக்கான இத்தகைய தனி மருத்துவக் கட்டமைப்புகளுக்கு முக்கியத்துவம் தந்ததன் விளைவுதான், நம் நாட்டில் 2013-ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் **‘தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம்’** ஏற்படுத்தப்பட்டது.

ஆனால், பல மாநிலங்களில் அந்த இயக்கம் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை. அதன் பற்றாக்குறையை **‘கோவிட் பெருந்தொற்று’** வெளிச்சம் போட்டுக் காட்டியது. தமிழ்நாட்டில், அதுவும் தலைநகர் சென்னையில் அந்த இயக்கம் நகர உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று, ஒன்றிய அரசால் வலியுறுத்தப்பட்டது. ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலே நடத்தப்படாமல் இருந்ததால் நகரவாசிகள் பெரும் இன்னலுக்கு உள்ளாயினர்.

இந்நிலையில், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு 2021-ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சியில் அமர்ந்தவுடன், ‘அனைவருக்கும் நல்வாழ்வு திட்டம்’ வழியாக ஏழை, எளிய மக்களுக்கு சுகாதார சேவைகள் அவர்களின் வீடுகளுக்கு அருகில், செலவினம் ஏதுமின்றி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், 7 ஆயிரத்து 291 கிராம துணை சுகாதார நிலையங்கள் ‘நலவாழ்வு நிலையங்களாக’ மாற்றப்பட்டன.

இங்கு 12 வகையான ஒருங்கிணைந்த மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன. மேலும் இந்த நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட தொலைதூர மருத்துவ சேவையை (டெலி கன்சல்டேஷன்) சிறப்பாகக் கொண்டு சென்றதற்காக ஒன்றிய அரசின் விருதையும் தமிழ்நாடு பெற்றது.

கிராமப்புறங்களில் உள்ள ‘நலவாழ்வு நிலையங்கள்’ போல தற்போது நகரங்களில் ‘நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்’ நம் கழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஜூன் 6-ஆம் தேதி, மாநிலம் முழுவதும் 500 நலவாழ்வு மையங்களை நம் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்தியாவிலேயே மருத்துவச் சேவைகளில் முன்னணியில் நிற்கும் தமிழ்நாட்டில், பொது சுகாதார சேவைகளை மேலும் வலுப்படுத்தும் தூண்களாக இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் இருக்கப் போகின்றன.

## அடிப்படை அத்தியாவசிய சேவைகள்

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று, சரியாக ஓர் ஆண்டு முடிந்த நிலையில், 2022 மே 7 ஆம் தேதி சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார். அதன் முதல் கட்டமாக 500 மையங்கள் கட்டட வசதி, மனிதவளம் மற்றும் உள்கட்டமைப்புப் பணிகள் ஆகியவை எல்லாம் முடிந்து, பொதுமக்கள் பயன்பாட்டுக்காகத் திறக்கப்பட்டுள்ளன.

மாநகராட்சிகளான சென்னையில் 140, கோவையில் 50, மதுரையில் 46, திருச்சியில் 25, சேலத்தில் 25, திருப்பூரில் 25 மையங்களும், நகராட்சிப் பகுதிகளில் 189 மையங்களும் திறக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர் மற்றும் ஒரு துணைப் பணியாளர் வீதம் ஒவ்வொரு நகர்ப்புற நல வாழ்வு மையத்திலும் பணிபுரிய மாவட்டச் சுகாதாரச் சங்கங்களின் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இந்த மையங்கள் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், பிற்பகல் 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் செயல்படும். இங்கு, கர்ப்பிணித் தாய்மார்களின் பராமரிப்பு, குழந்தைகளுக்கான நோய்த் தடுப்பூசி மருந்துகள் மற்றும் அனைத்து வயதினருக்கும் ஏற்படும் எளிய வகைத் தொற்று நோய்கள் உள்ளிட்ட 12 வகையான அத்தியாவசிய மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

## சுகாதாரக் கல்வியும் விழிப்புணர்வும்

இந்த நகர்ப்புற நலவாழ்வு மையம் இருக்கின்ற பகுதிகளில் உள்ள பள்ளிகளில், அந்தப் பள்ளி சுகாதாரக் குழுவினருடன் இணைந்து தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். மேலும் மையம் சார்ந்த பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கும் சுகாதார கல்வி மற்றும் விழிப்புணர்வும் வழங்கப்பட உள்ளன.

இந்த மையங்களில் தொலைதூர மருத்துவ சேவையும் வழங்கப்படுகிறது. அதாவது, மருத்துவர்களை நோயாளிகள் காணொளி வாயிலாகத் தொடர்பு கொண்டு சிகிச்சை பெறலாம். மேலும் இ-சஞ்சீவினி இணையதளம் மூலமாக நோயாளிகள் காணொளி வாயிலாக உயர் சிகிச்சைக்காக மற்றொரு முதுநிலை மருத்துவரின் ஆலோசனையையும் பெறலாம்.

இந்த மையங்களைத் திறந்துவைத்து, முதலமைச்சர் பேசும்போது, “திராவிட மாடல் ஆட்சியில் கல்வி, மருத்துவம் இரண்டையும் இரு கண்களாக போற்றி வருகிறோம். தற்போது 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் எப்படி ஏழை எளியோரின் நம்பிக்கையாக இருக்கிறதோ, அதை போலவே நகர்ப்புற நலவாழ்வு மையமும் செயல்பட வேண்டும். **‘அனைவருக்கும் நலவாழ்வு திட்டம்’** என்பது இந்தியாவுக்கே முன்னோடியான திட்டமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை” என்றார். ஆம்... இனி நகரங்கள் நலமாகும்!

**...சாதனை தொடரும்**

### நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் சிறப்பம்சம்...

- **12** வகையான அத்தியாவசிய மருத்துவ சேவைகள்.
- **63** வகையான பரிசோதனைகள்.
- **171** வகையான மருந்துகள்.
- **14** வகையான ஆய்வகப் பரிசோதனைகள்.
- **32** வகையான மருத்துவக் கருவிகள்.

### என்னென்ன மருத்துவ சேவைகள்... சிகிச்சைகள்...

- பேறுசார் மற்றும் மகப்பேறு பச்சிளங் குழந்தை சேவைகள்.
- பச்சிளம் குழந்தை பராமரிப்புச் சேவைகள்.
- குழந்தைநலம் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலம்.
- குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை மற்றும் இனப்பெருக்கக் குழந்தைநலச் சேவைகள்.
- தொற்றுநோய்த் தடுப்பு.
- புறநோயாளிகளுக்கான எளிய மற்றும் சிறிய நோய்களுக்கான தடுப்பு மருத்துவம்.
- தொற்றாநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை.
- மனநல பாதிப்பு கண்டறிதல் மற்றும் சிகிச்சை.
- கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை மற்றும் பராமரிப்பு.
- பல் பராமரிப்பு.
- முதியோர்களுக்கான நோய்த் தடுப்பு சுகாதார சேவைகள்.
- அவசர முதலுதவி சிகிச்சை, விபத்து மற்றும் அவசரகால சேவைகள்.

## ஊரே.. உணவே.. உறவே...!

உலக அகதிகள் தினத்தை (ஜூன்-20) முன்னிட்டு ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர் ஆணையத்தோடு இணைந்து ‘ஆஃபர்’ என்ற தொண்டு நிறுவனம், சென்னை செம்மொழிப் பூங்காவில், ‘ஊரும் உணவும்’ என்ற தலைப்பில், புலம்பெயர்ந்தவர்கள் உணவுத் திருவிழாவை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கைத் தமிழர்கள், மியான்மர் மற்றும் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த புலம்பெயர்ந்த மக்களால் தயார் செய்யப்பட்ட உணவு வகைகள், இந்நிகழ்வில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

புலம் பெயர் இலங்கைத் தமிழர்களின் பிரத்தியேக உணவுகளான, ‘கிழங்கு பன்’, ‘மீன் பன்’, ‘கிழங்கு ரொட்டி’, ‘பாண் இறால் குழம்பு’ ஆகியவை விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ‘ஆப்கன் கெபாப்’, ‘மியான்மர் புலாவ்’ போன்றவையும் இங்கு விற்பனை செய்யப்பட்டன.

கலாசார பரிமாற்றத்தில் உணவின் பங்கு முக்கியமானது. வரலாற்றில் விடுபட்டுப் போனவர்களான அகதிகளையும் உணவின் மூலம் ஒன்றிணைக்கும், இதுபோன்ற முயற்சிகள் ‘யாதும் ஊரே’ என்று சொன்ன தமிழ்ப் பண்பாட்டு விழுமியத்தின் நீட்சி என்றே சொல்லலாம்.

## :ப்ளாஷ்பேக்



### தோளில் கை!

என் தந்தை, ‘பெரியார் பெருந்தொண்டர்’ என்.ஆர்.சாமி, ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டச் செயலாளராக நெடுங்காலம் இருந்தவர். தந்தை பெரியார் இந்தப் பகுதிக்கு எப்போது வந்தாலும், எங்கள் வீட்டில்தான் தங்குவார். 1971-ல் பெரியார் காரைக்குடிக்கு வருகை தந்திருந்தார். அவரிடம் புகைப்படம் எடுத்துக்கொள்ள, 5 ரூபாய் நிதி அளிக்க வேண்டும். அப்போது நகரச் செயலாளராக இருந்த நான், வசூலாகும் நிதியை எல்லாம் பெரியார் அருகிலேயே அமர்ந்து கணக்கிட்டு, இறுதியாக அவரிடம் அளித்தேன். ‘ஆங்.. எல்லாம் சரி... எல்லாம் சரி...’ என்று என்னை அருகில் அழைத்து, தோள் மீது கை போட்டுக்கொண்டு, புகைப்படக்காரரை அழைத்துப் படமெடுக்கச் சொன்னார். அந்தப் படம்தான் இது.



சாமி.சமதர்மம்

**-சாமி.சமதர்மம், சிவகங்கை மண்டல மேனாள் தலைவர், திராவிடர் கழகம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### இமாலய இலக்கு!

**1963-ஆம் ஆண்டு ஜூலையில், திருவண்ணாமலைத் தொகுதி இடைத்தேர்தல் வெற்றி விழா பொதுக்கூட்டம், சென்னை கடற்கரையில் நடைபெற்றது. அந்த மேடையில்தான், 1967 பொதுத்தேர்தலைச் சந்திக்க 10 லட்ச ரூபாய் நிதி திரட்டும் இலக்கை அறிவித்தார் கழகப் பொருளாளர் கலைஞர். அப்போது, கற்பனை செய்ய முடியாத தொகை அது. கழக பொதுச் செயலாளர் பேரறிஞர் அண்ணா உட்பட கழக முன்னணித் தலைவர்கள் அனைவருக்கும் ‘பத்து லட்சம் ரூபாய் நம்மால் திரட்ட முடியுமா’ என்று சந்தேகம் கொண்டனர். அண்ணா, தொடக்கத்தில் தயங்கினாலும் கலைஞரின் முனைப்புக்கும் முயற்சிக்கும் தனது முழு வாழ்த்தையும் ஒத்துழைப்பையும் வழங்கினார். கலைஞர் பதினோரு லட்ச ரூபாய் திரட்டி சாதித்துக் காட்டினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 160




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.